# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 117/2018**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 13 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு. ஸ்ரீதரண் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of February 2026.

**(Accused absent. Petition filed and allowed.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உறைவிட மருத்துவ அலுவலராக பணிபுரிகிறேன். கடந்த 01.03.2016 அன்று திருநெல்வேலி ஷிபா மருத்துவமனையில் சட்ட மருத்துவ ஆலோசகராக செயல்பட்டபோது, அன்றைய தினம் முற்பகல் 01.15 மணியளவில் தட்டப்பாறை ஊரை சேர்ந்த வெள்ளத்துரை (40), த.பெ.மாடசாமித்தேவர் என்ற நோயாளி அவருடைய சகோதரர் திரு. கணேசன் அவர்களால் சிகிச்சைக்காக

அழைத்து வரப்பட்டார். மேற்குறிப்பிட்ட வெள்ளத்துரைக்கு 29.02.2016 அன்று இரவு 08.00 மணியளவில் அவரது சொந்த ஊருக்கு அருகில் உள்ள கிணற்றின் ஓரமாக நடந்துசெல்லும்போது தவறி கிணற்றினுள் விழுந்தபடியால் காயம்பட்டதாக சொன்னார். மேற்குறிப்பிட்ட நோயாளி சங்கரன்கோவிலில் உள்ள NMS மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து செல்லப்பட்டு, அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் திருநெல்வேலி ஷிபா மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்டார்.

வெள்ளத்துரையின் உடலின் மீது காணப்பட்ட காயங்கள்,

1) துளையிடப்பட்ட நிலையிலான சிதைந்த காயம் இடது தொடையில் 2 x 1x 1 cm அளவில் காணப்பட்டது.

2) துளையிடப்பட்ட நிலையிலான சிதைந்த காயம் வயிற்றின் இடது கீழ்ப்பகுதியில் 2 x 1x 1 cm அளவில் காணப்பட்டது.

3) பரவலான ஊமைக்காயம் வயிற்றின் நடுப்பகுதியின் கீழ்ப்பகுதியில் 16x 12 cm அளவில் காணப்பட்டது.

4) மார்பின் முன்புறம் வலி இருப்பதாக கூறினார், இடதுபுறம் அதிக வலி இருப்பதாக கூறினார்.

மேற்குறிப்பிட்ட நபர் மருத்துவமனைக்கு வருமபோது சுயநினைவுடன் இருந்தார். அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, அவருக்கு தொடர்சிகிச்சை அளிக்கப்பட்டு சிகிச்சை முடிந்து 28.03.2016 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட 1வது காயம் சாதாரண காயம் என்றும், 2 முதல் 4 வரையிலான காயங்கள் கொடுங்காயங்கள் என்றும் கருத்து கூறி காய சான்றிதழை 10.06.2016 அன்று வழங்கினேன். அந்த **காய சான்றிதழ் அ.சா.ஆ. 5** ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

காவல் ஆய்வாளர் என்னை எந்த தேதியில் விசாரணை செய்தார் என்பது தற்போது எனக்கு நினைவில்லை. மேற்சொன்ன காயங்கள் அனைத்தும் ஒரு

நபர் தவறி கிணற்றிலிருந்து கீழே விழும்போது கூர்மையான பொருட்கள் குத்தி ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்புண்டு. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றும், தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 117/2018**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | Prosecution Pw 14 | |
| | Defence | |
| | Court | |

| | | |
|---|---|---|
| Name | : | திரு. தாசன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of February 2026.

**(Accused absent. Petition filed and allowed.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது வீ.கே.புதூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்துவருகிறேன். இதற்கு முன்னர் ஊத்துமலை காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்தபோது, ஊத்துமலை காவல் நிலைய குற்ற எண். 56/2016, சட்டப்பிரிவுகள் 294(b), 307 IPC 3 of Arms Act வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்துக்களை தென்காசி நீதிமன்ற உத்தரவின்படி 28.04.2016ம் தேதி வேண்டுகோள் விண்ணப்ப கடிதத்துடன் சென்னை, வட்டார தடய அறிவியல்

ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். அதன் பின்னர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இவ்வழக்கு சம்பந்தப்பட்ட சென்னை தடய அறிவியல் ஆய்வக அறிக்கையை பெற்றுவந்து நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். இந்த பணிக்காக எனக்கு வழங்கப்பட்ட **கடவுச்சீட்டு அ.சா.ஆ.6** ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் சொன்னதுபோல் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் வழக்கு சொத்துக்களை சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைக்கவில்லை என்றும், காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உயரதிகாரிகளின் வேண்டுகோளுக்கேற்ப உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**